## பகுதி-ஆ – பொது அறிவு

## Part-B – General Studies

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 101–200 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| **Questions** | **: 101–200** | **Total Marks** | **: 150** |

101. The acids present in Grape and Tomato are ————————, ————————.

(A) Malic acid, Citric acid

(B) Acetic acid, Lactic acid

(C) Tartaric acid, Oxalic acid

(D) Ascorbic acid, Tannic acid

(E) Answer not known

திராட்சை மற்றும் தக்காளியில் உள்ள அமிலங்கள் ————————, ———————— ஆகும்.

(A) மாலிக் அமிலம், சிட்ரிக் அமிலம்

(B) அசிட்டிக் அமிலம், லாக்டிக் அமிலம்

(C) டார்டாரிக் அமிலம், ஆக்சாலிக் அமிலம்

(D) அஸ்கார்பிக் அமிலம், டானிக் அமிலம்

(E) விடை தெரியவில்லை

102. Match the following :

(a) Cerebral cortex — 1. Temperature control

(b) Hypothalamus — 2. Sensory perception

(c) Cerebellum — 3. Role in sleep-awake cycle

(d) Pons — 4. Maintenance of posture and balance

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) Answer not known

கீழ்க்காண்பவற்றை பொருத்துக :

(a) பெருமூளைப் புறணி — 1. உடல் வெப்பநிலையைக் கட்டுப்படுத்துதல்

(b) ஹைப்போதலாமஸ் — 2. உணர்வுகளைப் பெறுதல்

(c) சிறுமூளை — 3. உறக்க-விழிப்பு சுழற்சி

(d) பான்ஸ் — 4. உடல் சமநிலை

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 3 | 4 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

(E) விடை தெரியவில்லை

103. Match the following :

| | | | |
|---|---|---|---|
| (a) | Ganymede | 1. | Moves in opposite direction to the direction of the spin of its planet |
| (b) | Titan | 2. | Greenish star like appearance |
| (c) | Neptune | 3. | Moon with clouds in our solar system |
| (d) | Triton | 4. | Largest moon of our solar system |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) Answer not known

கீழ்க்காண்பனவற்றை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | கேனிமீட் | 1. | அதன் கோளின் சுழற்சிக்கு எதிர்திசையில் சுற்றும் |
| (b) | டைட்டன் | 2. | பச்சை நிற விண்மீன் போன்ற தோற்றம் |
| (c) | நெப்டியூன் | 3. | சூரிய மண்டலத்தின் மேகங்களுடன் கூடிய நிலவு |
| (d) | டிரைட்டான் | 4. | சூரிய மண்டலத்தின் மிகப் பெரிய நிலவு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 1 | 2 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 2 | 3 |

(E) விடை தெரியவில்லை

104. Who is the Chief Executive Authority of the Municipal Corporation?

(A) City Manager

(B) Municipal Commissioner

(C) Collector

(D) Assistant Commissioner of Police

(E) Answer not known

நகராட்சி நிர்வாகத்தின் முதன்மை நிர்வாக அலுவலர் யார்?

(A) நகர மேலாளர்

(B) நகராட்சி ஆணையர்

(C) மாவட்ட ஆட்சியர்

(D) காவல்துறை உதவி ஆணையர்

(E) விடை தெரியவில்லை

105. One of history's great oration, "I have a dream" was given by

(A) Winston Churchill

(B) Paul Kennedy

(C) Martin Luther King

(D) Abraham Lincoln

(E) Answer not known

வரலாற்றில் சிறந்த சொற்பொழிவுகளில் ஒன்றான, "எனக்கு ஒரு கனவு இருக்கிறது" என்று கூறியது

(A) வின்ஸ்டன் சர்ச்சில்

(B) பால் கென்னடி

(C) மார்டின் லூதர் கிங்

(D) ஆபிரகாம் லிங்கன்

(E) விடை தெரியவில்லை

106. Samagara Shiksha Abhiyan Scheme aims to

(A) Integrate vocational education with General Academic Education

(B) Integrate Technical Education with Higher Education

(C) Integrate Teacher Education with General Education

(D) Integrate Formal Education with Non-formal Education

(E) Answer not known

சமக்ரா சிக்ஷா அபியான் திட்டத்தின் நோக்கம்

(A) பொதுக் கல்வியுடன் தொழிற்கல்வியை இணைப்பது

(B) தொழில் நுட்பக் கல்வியுடன் உயர் கல்வியை இணைப்பது

(C) பொதுக் கல்வியுடன் ஆசிரியர் கல்வியை இணைப்பது

(D) முறைசார்ந்த கல்வியுடன் முறைசாராக் கல்வியை இணைப்பது

(E) விடை தெரியவில்லை

107. Who is the author of the book "Ambedkar : A Life"?

(A) Shashi Tharoor

(B) Ashwin Fernandes

(C) Meghnad Desai

(D) Satyajit Ray

(E) Answer not known

"அம்பேத்கர் : ஒரு வாழ்க்கை" என்னும் புத்தகத்தை எழுதியவர் யார்?

(A) சசி தரூர்

(B) அஸ்வின் பெர்னாண்டஸ்

(C) மேக்நாத் தேசாய்

(D) சத்யஜித் ரே

(E) விடை தெரியவில்லை

108. Match the Religion and Place of worship :

| | Religion | | Places of worship |
|---|---|---|---|
| (a) | Jainism | 1. | Synagogue |
| (b) | Judaism | 2. | Agiyari |
| (c) | Buddhism | 3. | Basadi |
| (d) | Zorostrianism | 4. | Vihara |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| ✓(D) | 3 | 1 | 4 | 2 |

(E) Answer not known

மதம் மற்றும் வழிப்பாட்டுத் தலங்களைப் பொருத்துக :

| | மதம் | | வழிப்பாட்டு தலம் |
|---|---|---|---|
| (a) | சமணம் | 1. | சினகாக் |
| (b) | ஜுடாய்ஸம் | 2. | அகியாரி |
| (c) | புத்தமதம் | 3. | பசாதி |
| (d) | ஜொராஸ்டிரியம் | 4. | விஹாரா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 1 | 4 | 2 | 3 |
| (D) | 3 | 1 | 4 | 2 |

(E) விடை தெரியவில்லை

109. Consider the following statement (Reason and Assertion type) :

Assertion [A] : Make in India program was launched in 2014.

Reason [R] : Intended to boost the domestic manufacturing sector and also augment investment into the country.

(A) [A] is true, but [R] is false

(B) Both [A] and [R] are true, and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கீழ்கண்ட வாக்கியங்களை கவனி (கூற்று மற்றும் காரணம் வகை) :

கூற்று [A] : இந்தியாவில் உற்பத்தி செய்யும் திட்டம் 2014-ல் அறிமுகமானது

காரணம் [R] : இதன் முக்கிய நோக்கம் உள்நாட்டு உற்பத்தித் துறையை ஊக்குவிப்பதும் மற்றும் நாட்டிற்கான முதலீடுகளை அதிகரிப்பதே ஆகும்.

(A) [A] சரி, ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, மற்றும் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம்

(C) [A] தவறு, [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R] என்பது [A] விற்கான சரியான விளக்கம் அல்ல

(E) விடை தெரியவில்லை

110. Which of the following statements are true about the Himalayas?

(i) Zaskar, Ladakh, Kailash and Karakoram ranges are found in the trans – Himalayas.

(ii) The Greater Himalayas receives lesser rainfall as compared to the lesser Himalayas and the Siwaliks.

(iii) The Outer Himalayas is the most continuous range.

(A) (i) only

(B) (i) and (ii) only

(C) (i) and (iii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

கீழ்க்காணும் வாக்கியங்களில் எவை சரியாக இமயமலையுடன் தொடர்புடையது?

(i) சாஸ்கர், லடாக், கைலாஸ் மற்றும் காரகோரம் ஆகிய முக்கியமான மலைத்தொடர்கள் ட்ரான்ஸ் இமயமலையில் அமைந்துள்ளது.

(ii) சிறிய இமயமலை மற்றும் சிவாலிக் குன்றுகளை ஒப்பிடும்போது இப்பகுதி குறைவான மழையைப் பெறுகின்றது.

(iii) வெளி இமயமலை மிகவும் தொடர்ச்சியான மலைத்தொடராக அமைந்துள்ளது.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (ii) மட்டும்

(C) (i) மற்றும் (iii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

111. Which animal was not known to the Harappans?

(A) Pig

(B) Elephant

(C) Horse

(D) Buffalo

(E) Answer not known

ஹரப்பர்களால் அறியப்படாத விலங்கு எது?

(A) பன்றி

(B) யானை

(C) குதிரை

(D) எருமை

(E) விடை தெரியவில்லை

112. Match the following with their correct answers :

(a) Peshwa — 1. Secretary

(b) Shurnavis — 2. Chief Justice

(c) Nyayadhish — 3. High Priest

(d) Pandit Rao — 4. Prime Minister

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) Answer not known

பின்வருவனவற்றை அவற்றின் சரியான பதிலுடன் பொருத்தவும் :

(a) பேஷ்வா — 1. செயலர்

(b) சுர்நாவிஸ் — 2. தலைமை நீதிபதி

(c) நியாயதீஸ் — 3. தலைமை அர்ச்சகர்

(d) பண்டிட் ராவ் — 4. பிரதம அமைச்சர்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 4 | 1 | 2 | 3 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 2 | 3 | 4 | 1 |

(E) விடை தெரியவில்லை

113. Which of the following states have a Common High Court?

(A) Delhi and Calcutta

(B) Kerala and Telangana

(C) Punjab and Haryana

(D) Maharashtra and Gujarat

(E) Answer not known

கீழ்க்காணும் எந்த மாநிலங்கள் பொதுவான உயர்நீதி மன்றத்தைப் பெற்றுள்ளன?

(A) டெல்லி மற்றும் கொல்கத்தா

(B) கேரளா மற்றும் தெலுங்கானா

(C) பஞ்சாப் மற்றும் ஹரியானா

(D) மகாராஷ்டிரா மற்றும் குஜராத்

(E) விடை தெரியவில்லை

114. In which year did the Govt. of India declare Tamil as the first Classical Language?

(A) 2008 (B) 2010

(C) 2004 (D) 2002

(E) Answer not known

எந்த ஆண்டு இந்திய அரசால் முதல் செம்மொழியாக தமிழ் மொழி அறிவிக்கப்பட்டது?

(A) 2008 (B) 2010

(C) 2004 (D) 2002

(E) விடை தெரியவில்லை

115. Human Rights Day is celebrated on

(A) 9th December

(B) 11th December

(C) 10th December

(D) 12th December

(E) Answer not known

மனித உரிமை நாள் கொண்டாடப்படுவது ———— ஆகும்

(A) டிசம்பர் 9

(B) டிசம்பர் 11

(C) டிசம்பர் 10

(D) டிசம்பர் 12

(E) விடை தெரியவில்லை

116. Arrange the following Committees in the correct chronological order :

I. G.V.K. Rao Committee

II. Balwant Rai Mehta Committee

III. L.M. Singhvi Committee

IV. Ashok Mehta Committee

(A) III, I, II, IV

(B) IV, III, I, II

(C) II, IV, III, I

(D) II, IV, I, III

(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ள குழுக்களை காலவரிசைப்படி எழுதுக :

I. ஜி.வி.கே. ராவ் குழு

II. பல்வந்த்ராய் மேத்தா குழு

III. எல்.எம். சிங்வி குழு

IV. அசோக் மேத்தா குழு

(A) III, I, II, IV

(B) IV, III, I, II

(C) II, IV, III, I

(D) II, IV, I, III

(E) விடை தெரியவில்லை

117. Which of the following statements are true about "Anti-defection law"?

(i) Provided by the 52nd Amendment Act of 1985

(ii) Added in the 9th schedule to the Constitution

(iii) Made some changes in the 91st Amendment Act of 2003

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

கீழ்க்காணும் வாக்கியங்களில் கட்சி தாவல் தடைச் சட்டத்தைப் பற்றி சரியான கூற்று எது?

(i) 52வது அரசமைப்புச் சட்டத்திருத்தம் 1985, அளித்தது.

(ii) அரசமைப்பில் 9வது அட்டவணையில் இணைக்கப்பட்டது.

(iii) 91வது அரசமைப்புச் சட்டத்திருத்தம் 2003ன் மூலமாக ஓர் சிறு திருத்தம் செய்யப்பட்டது.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

118. The Industrial Policy of India, which abolished the MRTP Act in 1969 was

(A) 1991 Industrial Policy

(B) 1977 Industrial Policy

(C) 1980 Industrial Policy

(D) 1990 Industrial Policy

(E) Answer not known

எந்த தொழிற்கொள்கையானது இந்தியாவில் MRTP 1969 சட்டத்தை ஒழித்தது?

(A) 1991 ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை

(B) 1977 ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை

(C) 1980 ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை

(D) 1990 ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை

(E) விடை தெரியவில்லை

119. Kisan Credit Card (KCC) was launched in 1998 by

(A) Reserve Bank of India

(B) NABARD Bank

(C) Govt. of India

(D) Reserve Bank of India and NABARD Bank

(E) Answer not known

உழவர் கடன் அட்டை (KCC) 1998-ல் யாரால் தொடங்கப்பட்டது?

(A) மைய வங்கி

(B) நபார்டு வங்கி

(C) இந்திய அரசு

(D) மைய வங்கி மற்றும் நபார்டு வங்கி

(E) விடை தெரியவில்லை

120. Assertion [A] : The Ministry of Education (Formerly Human Resource Development–MHRD) in India formulates education Policy in India and also undertakes Education Programs.

Reason [R] : The centre is represented by the Ministry of Education decides the India's Education budget.

(A) Both [A] and [R] are true and [R] explains [A]

(B) Both [A] and [R] are true and [R] does not explains [A]

(C) [A] is correct and [R] is false

(D) [A] is false and [R] is true

(E) Answer not known

கூற்று [A] : மத்தியக்கல்வி அமைச்சகம் (இதற்கு முன் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்–MHRD) நம் நாட்டின் கல்விக் கொள்கைகளையும் திட்டங்களையும் வகுத்து நடைமுறைப்படுத்தி வருகிறது.

காரணம் [R] : மத்தியக் கல்வி அமைச்சகம் கல்விக்கான வரவு செலவு திட்டத்தை முடிவு செய்கிறது.

(A) [A] மற்றும் [R] இரண்டும் சரியானது, மற்றும் [R], [A] வை விளக்குகிறது

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரியானது, மற்றும் [R], [A] வை விளக்கவில்லை

(C) [A] சரியானது மற்றும் [R] தவறானது

(D) [A] தவறானது மற்றும் [R] சரியானது

(E) விடை தெரியவில்லை

121. "The Swadeshi Steam Navigation Company" started with capital amount of

(A) Rs. 2 lakh
(B) Rs. 5 lakh
(C) Rs. 8 lakh
(D) Rs. 10 lakh
(E) Answer not known

சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனியின் ஆரம்ப மொத்த முதலீட்டு தொகை

(A) ரூ. 2 இலட்சம்
(B) ரூ. 5 இலட்சம்
(C) ரூ. 8 இலட்சம்
(D) ரூ. 10 இலட்சம்
(E) விடை தெரியவில்லை

122. Ram Prasad Bismil and Ashfaqulla Khan were arrested and tried in the ———— case.

(A) Chittagong Armoury raid
(B) Kakori conspiracy case
(C) Lahore conspiracy case
(D) Bomb Throwing in the Central Legislative Assembly
(E) Answer not known

———— புரட்சிகர நடவடிக்கைகளுக்காக ராம்பிரசாத் பிஸ்மில் மற்றும் அஷ்ஃபாகுல்லா கானும் கைது செய்யப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

(A) சிட்டகாங் ஆயுதக்கிடங்கு மீதானத் தாக்குதல்
(B) காகோரி சதி வழக்கு
(C) லாகூர் சதி வழக்கு
(D) மத்தியச் சட்டப் பேரவையில் புகைக்குண்டு வீசியதற்காக
(E) விடை தெரியவில்லை

123. Who appeared in the court in defence of revolutionary nationalists in the Alipur blast case?

(A) Chittaranjan Dass (B) Bala Gangadhar Tilak

(C) V.O. Chidambaram (D) G. Subramaniyam

(E) Answer not known

அலிப்பூர் குண்டு வெடிப்பு வழக்கில் புரட்சிகர தேசியவாதிகளுக்காக வாதாடியவர் யார்?

(A) சித்தரஞ்சன் தாஸ் (B) பாலகங்காதர திலகர்

(C) வ.உ. சிதம்பரம் (D) G. சுப்ரமணியம்

(E) விடை தெரியவில்லை

124. Who was honoured with such titles as Rao Sahib (1926), Rao Bahadur (1930) and Divan Bahadur (1936) for his selfless social services?

(A) Rettaimalai Srinivasan

(B) Mylai Chinnathambi Raja

(C) M. Singaravelar

(D) Dr. C. Natesanar

(E) Answer not known

தன்னலமற்ற சேவைக்காக ராவ் சாகிப் (1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936) ஆகிய பட்டங்களைப் பெற்றவர் யார்?

(A) இரட்டைமலை சீனிவாசன்

(B) மயிலை சின்னதம்பி ராஜா

(C) ம. சிங்கார வேலர்

(D) டாக்டர். சி. நடேசனார்

(E) விடை தெரியவில்லை

125. What removes inner negativity of a Mankind like a lamp according to Valluvar?

(A) Lamp of Penance

(B) Blessed Lamp

(C) Light of the Family

(D) Lamp with truth's pure radiance

(E) Answer not known

அகத்தின் இருளைப் போக்கும் விளக்காக வள்ளுவர் எதனைக் கூறுகின்றார்?

(A) தவ விளக்கு

(B) அருள் விளக்கு

(C) குடும்ப விளக்கு

(D) பொய்யா விளக்கு

(E) விடை தெரியவில்லை

126. A person invested Rs.12,000 in a fixed deposit scheme for 2 years at the rate of 5% compound interest. How much amount will be got on maturity of the fixed deposit?

(A) Rs.13,200

(B) Rs.13,430

✓(C) Rs.13,230

(D) Rs.12,600

(E) Answer not known

ஒருவர் ரூ. 12,000 ஐ 5% கூட்டுவட்டி விகிதத்தில் 2 ஆண்டுகளுக்கு நிரந்தர வைப்பு திட்டத்தில் செலுத்துகிறார். நிரந்தர வைப்பு முதிர்வு தொகையாக அவர் எவ்வளவு பெறுவார்?

(A) ரூ. 13,200

(B) ரூ. 13,430

(C) ரூ. 13,230

(D) ரூ. 12,600

(E) விடை தெரியவில்லை

127. The Roman Writer Piliny the Elder writes of ————'s, in his Natural History as the first emporium of India.

(A) Kaveripumpattinam
(B) Nagapattinam
(C) Musiri
(D) Korkai
(E) Answer not known

ரோம் நாட்டைச் சேர்ந்த மூத்த பிளினி தன்னுடைய இயற்கை வரலாறு எனும் நூலில் ———— இந்தியாவின் முதல் பேரங்காடி எனக் குறிப்பிட்டுள்ளார்.

(A) காவிரிபூம்பட்டினம்
(B) நாகப்பட்டினம்
(C) முசிறி
(D) கொற்கை
(E) விடை தெரியவில்லை

128. Iyothee Thassar founded the Dravida Mahajana Sabha in 1891 and organised the First Conference of the association at

(A) Salem
(B) Trichy
(C) Nilgiris
(D) Madurai
(E) Answer not known

1891 இல் அயோத்தி தாசரால் நிறுவப்பட்ட திராவிட மகாஜனசபையின் முதல் மாநாடு நடைபெற்ற இடம்

(A) சேலம்
(B) திருச்சி
(C) நீலகிரி
(D) மதுரை
(E) விடை தெரியவில்லை

129. Who did eulogise Thirukkural as given below?

"Will any other didactic book is needed if one knows Thirukkural".

(A) Avvaiyaar
(B) Prof. Sundarampillai
(C) Bharathiyaar
(D) Shuddhananda Bharathi
(E) Answer not known

வள்ளுவன் செய்த திருக்குறளை நன்கு கற்றுணர்ந்தோர் உள்ளுவரோ மனுவாதி நூல்களை என்று திருக்குறளைப் புகழ்ந்துரைத்தவர் யார்?

(A) ஔவையார்
(B) பேரா. சுந்தரம் பிள்ளை
(C) பாரதியார்
(D) சுத்தானந்த பாரதியார்
(E) விடை தெரியவில்லை

130. What are the two things that one should keep in mind when setting out to conquer the world in the Kural?

"Gnalam Karuthinum Kaikoodum"

(A) Wealth and Bravery / courage
(B) Time and Place
(C) Brother-sister help
(D) Father, mother help
(E) Answer not known

"ஞாலம் கருதினும் கை கூடும்" –

மேற்கூறிய திருக்குறளின்படி ஒருவர் உலகம் முழுவதையும் கைப்பற்றக் கருதினாலும் அவர் எந்த இரண்டை அறிந்து செயல்பட வேண்டும்?

(A) செல்வமும், வீரமும்
(B) காலமும், இடமும்
(C) சகோதர – சகோதரி உதவி
(D) தாய், தந்தை உதவி
(E) விடை தெரியவில்லை

131. Anemia Mukt Bharat was implemented in Tamil Nadu in the year

(A) 2010 (B) 2015

(C) 2018 (D) 2020

(E) Answer not known

தமிழ்நாட்டில் இரத்த சோகை முக்த் பாரத் திட்டம் எந்த ஆண்டு தொடங்கப்பட்டது?

(A) 2010 (B) 2015

(C) 2018 (D) 2020

(E) விடை தெரியவில்லை

132. Implementation of the Tamil Nadu Urban Healthcare project funded by the Japan International Corporation agency for ———— years.

(A) 5 (B) 6

(C) 7 (D) 8

(E) Answer not known

ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகமை நிதி உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற சுகாதாரத் திட்டத்தின் செயலாக்கக் காலம் ———— ஆண்டுகள்.

(A) 5 (B) 6

(C) 7 (D) 8

(E) விடை தெரியவில்லை

133. India observed 2018 as the national year of which crop?

(A) Millets (B) Oil seeds

(C) Sugarcane (D) Cotton

(E) Answer not known

இந்தியா 2018 ஆம் ஆண்டை எந்தப் பயிரின் தேசிய ஆண்டாக கடைபிடித்தது?

(A) திணை வகைகள் (B) எண்ணெய் வித்துக்கள்

(C) கரும்பு (D) பருத்தி

(E) விடை தெரியவில்லை

134. Assertion [A] : "Thiranari Thaervu Thittam" was launched in the year 2023.

Reason [R] : To encourage the government school students to pursue higher education in premier institution.

(A) [A] is true, but [R] is false

(B) Both [A] and [R] are true, [R] is the correct explanation of [A]

(C) [A] is false, [R] is true

(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : 2023 ஆம் ஆண்டு திறனறித் தேர்வுத் திட்டம் தொடங்கப்பட்டது.

காரணம் [R] : அரசுப் பள்ளி மாணவர்களை முதன்மை கல்வி நிறுவனத்தில் உயர்கல்வி பயில ஊக்குவிக்க உருவாக்கப்பட்டது.

(A) [A] சரி, ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, [R]-என்பது [A]-வின் சரியான விளக்கம்

(C) [A] தவறு, [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R]-என்பது [A]-வின் சரியான விளக்கம் இல்லை

(E) விடை தெரியவில்லை

135. Various welfare schemes to enhance the overall development of Adi Dravidar and Scheduled Tribe people, a sum of Rs. ———— crores has been allocated in the Budget Estimate for the year 2023-2024.

(A) Rs. 3012.85

(B) Rs. 3212.85

(C) Rs. 3512.85

(D) Rs. 3552.85

(E) Answer not known

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் ஒட்டு மொத்த வளர்ச்சியை மேம்படுத்த பல்வேறு நலத்திட்டங்கள், 2023-2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவு மதிப்பீட்டில் ரூ. ———— கோடிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(A) ரூ. 3012.85

(B) ரூ. 3212.85

(C) ரூ. 3512.85

(D) ரூ. 3552.85

(E) விடை தெரியவில்லை

136. The radius of a conical tent is 700 cm and the height is 24 m. Calculate the length of the canvas used to make the tent if the width of the rectangular canvas is 4 m.

(A) 137.5 m
(B) 13.75 m
(C) 1.375 m
(D) 1.037 m
(E) Answer not known

கித்தானைக் கொண்டு 700 செ.மீ ஆரமும் 24 மீ உயரமும் உடைய ஒரு கூம்பு வடிவக் கூடாரம் உருவாக்கப்படுகிறது. செவ்வக வடிவக் கித்தானின் அகலம் 4 மீ எனில் அதன் நீளம் காண்க.

(A) 137.5 மீ
(B) 13.75 மீ
(C) 1.375 மீ
(D) 1.037 மீ
(E) விடை தெரியவில்லை

137. Find the next number :

1, 2, 6, 24, 120, ?

(A) 135
(B) 146
(C) 720
(D) 438
(E) Answer not known

அடுத்த எண்ணைக் காண்க :

1, 2, 6, 24, 120, ?

(A) 135
(B) 146
(C) 720
(D) 438
(E) விடை தெரியவில்லை

138. If $x : y = 2 : 1$, then $\left(x^2 - y^2\right) : \left(x^2 + y^2\right)$ is

(A) 5 : 3 (B) 1 : 3

(C) 3 : 1 (D) 3 : 5

(E) Answer not known

$x : y = 2 : 1$ எனில் $\left(x^2 - y^2\right) : \left(x^2 + y^2\right)$ என்பது

(A) 5 : 3 (B) 1 : 3

(C) 3 : 1 (D) 3 : 5

(E) விடை தெரியவில்லை

139. Kumaran bought a raincoat and saved Rs. 25 with discount of 20%. What was the original price of the raincoat?

(A) Rs. 125 (B) Rs. 250

(C) Rs. 175 (D) Rs. 150

(E) Answer not known

குமரன் 20% தள்ளுபடியுடன் ஒரு ரெயின்கோட்டை வாங்கி ரூ. 25 யை சேமித்தார் எனில், ரெயின்கோட்டின் அசல் விலை என்ன?

(A) ரூ. 125 (B) ரூ. 250

(C) ரூ. 175 (D) ரூ. 150

(E) விடை தெரியவில்லை

140. If $A=1, B=2, C=3, ....Z=26$ then L.C.M. of H,C,F is not equal to

(A) $X$

(B) $E+S$

(C) $A+C+H$

(D) $A\times C\times H$

(E) Answer not known

$A=1, B=2, C=3, ....Z=26$ எனக் கொண்டால் H,C,F–ன் மீ.சி.ம எதற்குச் சமமில்லை?

(A) $X$

(B) $E+S$

(C) $A+C+H$

(D) $A\times C\times H$

(E) விடை தெரியவில்லை

141. Find the value of $\sqrt{5\sqrt{5\sqrt{5....}}}$

(A) $5^3$

(B) $5^0$

(C) $5^2$

(D) $5^1$

(E) Answer not known

மதிப்பு காண்க $\sqrt{5\sqrt{5\sqrt{5....}}}$

(A) $5^3$

(B) $5^0$

(C) $5^2$

(D) $5^1$

(E) விடை தெரியவில்லை

142. How many great circles can a hemisphere have?

(A) 1
(B) 0
(C) uncountable
(D) 2
(E) Answer not known

ஒரு அரைக்கோளத்தில் காணப்படும் மீப்பெரு வட்டங்களின் எண்ணிக்கை எத்தனை?

(A) 1
(B) 0
(C) எண்ணற்றவை
(D) 2
(E) விடை தெரியவில்லை

143. Find the volume of a cylinder whose height is 4 m and whose base area is 500 $m^2$.

(A) 2000 $m^3$
(B) 2500 $m^3$
(C) 2100 $m^3$
(D) 2700 $m^3$
(E) Answer not known

உயரம் 4 மீ மற்றும் அடிப்பரப்பு 500 ச.மீ கொண்ட ஓர் உருளையின் கனஅளவைக் காண்க.

(A) 2000 மீ$^3$
(B) 2500 மீ$^3$
(C) 2100 மீ$^3$
(D) 2700 மீ$^3$
(E) விடை தெரியவில்லை

144. If $3x+4y:4x+6y=22:32$ then $x:y$ is

(A) 1 : 2 (B) 1 : 4

(C) 2 : 1 (D) 3 : 1

(E) Answer not known

$3x+4y:4x+6y=22:32$ எனில் $x:y$ என்பது

(A) 1 : 2 (B) 1 : 4

(C) 2 : 1 (D) 3 : 1

(E) விடை தெரியவில்லை

145. If the two numbers $a$ and $b$ are in the ratio $m:n$. Then the LCM of $a$ and $b$ is

(A) $ma$

(B) $nb$

(C) $mb$

(D) $ab$

(E) Answer not known

$a$ மற்றும் $b$ என்னும் இரு எண்கள் $m:n$ என்னும் விகிதத்தில் அமைந்துள்ளன எனில் $a$ மற்றும் $b$ யின் மீ.பொ.ம எது?

(A) $ma$

(B) $nb$

(C) $mb$

(D) $ab$

(E) விடை தெரியவில்லை

146. An intelligent man carries 3 sacks with 30 mangoes each. As he crosses each toll, he has to give 1 mango for each sack. He crosses 30 tolls. How many mangoes he will have at the end?

(A) 0
(B) 10
(C) 20
(D) 25
(E) Answer not known

ஒரு புத்திசாலி மனிதன் மூட்டைக்கு 30 மாம்பழங்கள் வீதம் 3 மூட்டைகள் எடுத்துச் செல்கிறான். ஒவ்வொரு சுங்கச் சாவடியைத் தாண்டும் பொழுதும் மூட்டைக்கு 1 மாம்பழம் தர வேண்டும். 30 சுங்கச் சாவடிகளைத் தாண்டும் பொழுது அவனிடம் எத்தனை மாம்பழங்கள் மீதம் இருக்கும்?

(A) 0
(B) 10
(C) 20
(D) 25
(E) விடை தெரியவில்லை

147. Find the length of the longest pole that can be placed in a room 24 m long, 18 m broad and 16 m high.

(A) 14 m
(B) 24 m
(C) 34 m
(D) 44 m
(E) Answer not known

24 மீ நீளம், 18 மீ அகலம் மற்றும் 16 மீ உயரம் உள்ள ஒரு அறையினுள் வைக்க முடிந்த மிகப் பெரிய கம்பியின் நீளம் என்ன?

(A) 14 மீ
(B) 24 மீ
(C) 34 மீ
(D) 44 மீ
(E) விடை தெரியவில்லை

148. Identify the teeth absent in milk dentition in mammals.

(A) Premolars
(B) Molars
(C) Canines
(D) Incisors
(E) Answer not known

பாலூட்டிகளில் பால்பற்களின் அமைவில் காணப்படாதது.

(A) முன்கடைவாய் பற்கள்
(B) பின்கடைவாய் பற்கள்
(C) கோரைப் பற்கள்
(D) வெட்டுப் பற்கள்
(E) விடை தெரியவில்லை

149. Which of the following food material is translocated by phloem loading?

(A) Glucose
(B) Starch
(C) Fructose
(D) Sucrose
(E) Answer not known

கீழ்க்காண்பவற்றில் எந்த வகை உணவுப் பொருள் ஃபுளோய உணவேற்றம் மூலம் கடத்தப்படுகிறது?

(A) குளுக்கோஸ்
(B) ஸ்டார்ச்
(C) ப்ரக்டோஸ்
(D) சுக்ரோஸ்
(E) விடை தெரியவில்லை

150. Which of the following statements are false about "conditions for no Doppler effect"?

1. Listener at rest and Source moves towards the Listener
2. S and L move in such a way that distance between them remains constant
3. S and L are moving in mutually perpendicular directions
4. The Source is situated at the centre of the circle along which the Listener is moving

(A) 1 only

(B) 1 and 2 only

(C) 1 and 4 only

(D) 3 and 4 only

(E) Answer not known

எக்கூற்று தவறானது : "டாப்ளர் விளைவு நடைபெறாமல் இருக்க நிபந்தனைகள்"

1. கேட்குநர் ஓய்வு நிலையிலும், ஒலி மூலம் கேட்குநரை நோக்கி நகர்கிறது
2. ஒலி மூலம் (S) மற்றும் கேட்குநர் (L) சம இடைவெளியில் நகரும்போது
3. ஒலி மூலம் (S) மற்றும் கேட்குநர் (L) ஒன்றுக்கொன்று செங்குத்தாக நகரும்போது
4. ஒலி மூலமானது வட்டப்பாதையின் மையப்பகுதியில் அமைந்து, கேட்குநர் வட்டப்பாதையில் நகரும்போது

(A) 1 மட்டும்

(B) 1 மற்றும் 2 மட்டும்

(C) 1 மற்றும் 4 மட்டும்

(D) 3 மற்றும் 4 மட்டும்

(E) விடை தெரியவில்லை

151. Identify the correctly matched Fossil :

(A) Alga – <u>Furcula</u>

(B) Bryophyte – <u>Naiadita</u>

(C) Pteridophyte – <u>Lepidocarpon</u>

(D) Gymnosperm – <u>Rhynia</u>

(E) Answer not known

சரியாக பொருந்திய தொல்லுயிரினை தேர்ந்தெடுக்க :

(A) பாசி – பர்குலா

(B) பிரையோஃபைட் – நயடைட்டா

(C) டெரிடோஃபைட் – லெப்பிடோகார்பான்

(D) ஜிம்னோஸ்பெர்ம் – ரைனியா

(E) விடை தெரியவில்லை

152. Choose the correct pairs :

| | | | |
|---|---|---|---|
| 1. | Phenolphthalein | – | Colourless in acidic medium and pink in basic medium |
| 2. | Methyl orange | – | Pink in basic medium and yellow in acid medium |
| 3. | Red litmus paper | – | Turns blue in basic medium |
| 4. | Blue litmus paper | – | Turns red in basic medium |

(A) 1 and 2 are correct

(B) 1 and 3 are correct

(C) 2 and 3 are correct

(D) 3 and 4 are correct

(E) Answer not known

சரியான இணைகளை தேர்ந்தெடு :

| | | | |
|---|---|---|---|
| 1. | பினாப்தலீன் | – | அமில ஊடகத்தில் நிறமற்றது, கார ஊடகத்தில் இளஞ்சிவப்பு நிறத்தை உருவாக்கும் |
| 2. | மெத்தைல் ஆரஞ்சு | – | கார ஊடகத்தில் இளஞ்சிவப்பு நிறம், அமில ஊடகத்தில் மஞ்சள் நிறத்தை உருவாக்கும் |
| 3. | சிவப்பு லிட்மஸ் தாள் | – | கார ஊடகத்தில் நீல நிறமாக மாறும் |
| 4. | நீல லிட்மஸ் தாள் | – | கார ஊடகத்தில் சிவப்பு நிறமாக மாறும் |

(A) 1 மற்றும் 2 சரியானது

(B) 1 மற்றும் 3 சரியானது

(C) 2 மற்றும் 3 சரியானது

(D) 3 மற்றும் 4 சரியானது

(E) விடை தெரியவில்லை

153. A fungus causing disease in plants is reported recently to cause infection in man is

(A) Plasmodiophora brassicae

(B) Chondrostereum purpureum

(C) Taphrina deformans

(D) Puccinia graminis var-tritici

(E) Answer not known

அண்மையில் தாவரங்களில் நோய் ஏற்படுத்தும் பூஞ்சையானது மனிதர்களைத் தாக்கி நோய்த்தொற்று ஏற்படுத்தியதாக தெரியவந்துள்ளது. இதற்கு காரணமான பூஞ்சை எது?

(A) பிளாஸ்மோடையோபோரா பிராசிக்கே

(B) காண்ட்ரோஸ்டிரியம் பர்பூரியம்

(C) டாப்ரினா டிபார்மன்ஸ்

(D) பக்சினியா கிராமினிஸ் வார்-டிரிட்டிசை

(E) விடை தெரியவில்லை

154. Which one of the state has swamp deer as its state animal?

(A) Kerala

(B) Nagaland

(C) Haryana

(D) Maharashtra

(E) Answer not known

பின்வருவனவற்றில் எந்த மாநிலம் சதுப்புநில மானை மாநில விலங்காகக் கொண்டுள்ளது?

(A) கேரளா

(B) நாகாலாந்து

(C) ஹரியானா

(D) மகாராஷ்டிரா

(E) விடை தெரியவில்லை

155. In which country the 49th G7 summit (2023) was held?

(A) USA

(B) South Africa

(C) Brazil

(D) Japan

(E) Answer not known

எந்த நாட்டில் (2023ஆம் ஆண்டு) 49-வது G7 உச்சி மாநாடு நடைபெற்றது?

(A) அமெரிக்கா

(B) தென்ஆப்பிரிக்கா

(C) பிரேசில்

(D) ஜப்பான்

(E) விடை தெரியவில்லை

156. Choose the correct statements :

(i) The Government of India enacted Wildlife Protection Act in 1972.

(ii) Project Tiger was launched in April 1974.

(iii) The Indian Government has established 16 Biosphere Reserves.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

சரியான வாக்கியங்களைத் தேர்ந்தெடு :

(i) இந்திய அரசு 1972-இல் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தை இயற்றியது.

(ii) புலிகள் பாதுகாப்பு திட்டம் ஏப்ரல் 1974-இல் தொடங்கப்பட்டது.

(iii) இந்திய அரசாங்கம் 16 உயிர்க்கோள காப்பகங்களை ஏற்படுத்தியுள்ளது.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

157. Indian Railways has introduced a cutting-edge AI based technology called ———— to prevent elephant accidents on railway tracks.

(A) Hatti port

(B) Radio galaxy

(C) Gajraj Suraksha

(D) Geoglyph saver

(E) Answer not known

தண்டவாளங்களில் யானை விபத்துக்களைத் தடுக்க இந்திய ரயில்வே ———— என்ற அதி நவீன AI தொழில்நுட்பத்துடன் இயங்கும் முறையை அறிமுகப்படுத்தியுள்ளது.

(A) ஹத்தி போர்ட்

(B) ரேடியோ காலக்ஸி

(C) கஜ்ராஜ் சுரக்ஷா

(D) ஜியோக்ளிப் சேவர்

(E) விடை தெரியவில்லை

158. Which one of the following is the wrong option for the rock-cut cave temple of Gupta period?

(A) Udayagiri Cave (Odisha)

(B) Ajanta and Ellora Caves (Maharashtra)

(C) Elephanta Cave (Maharashtra)

(D) Bagh Cave (Madhya Pradesh)

(E) Answer not known

கீழ்க்கண்டவற்றுள் எது குப்தர் காலத்துக் குடைவரைக் கோயில் இல்லை?

(A) உதயகிரி குகை (ஒடிசா)

(B) அஜந்தா – எல்லோரா குகை (மகாராஷ்டிரா)

(C) எலிபண்டா குள்க (மகாராஷ்டிரா)

(D) பாக் குகை (மத்திய பிரதேசம்)

(E) விடை தெரியவில்லை

159. ______________ started a mass Raksha Bandan festival during Partition of Bengal.

(A) M.K. Gandhi
(B) Jawaharlal Nehru
(C) Surendranath Banerjee
(D) Rabindranath Tagore
(E) Answer not known

வங்கப் பிரிவினையின் போது ரக்ஷாபந்தன் விழாவை பெருமளவில் மக்கள் பங்கேற்பை தொடக்கி வைத்தவர்

(A) M.K. காந்தி
(B) ஜவஹர்லால் நேரு
(C) சுரேந்திரநாத் பானர்ஜி
(D) ரவீந்திரநாத் தாகூர்
(E) விடை தெரியவில்லை

160. A king who emerged victorious in all his expeditions and engraved the title Second Alexander on his coins

(A) Bahman Shah
(B) Mohammed Gawan
(C) Krishnadevaraya
(D) Samudragupta
(E) Answer not known

தான் பெற்ற வெற்றிகளை நினைவு கூறும் வகையில் தன் நாணயங்களில் தன்னுடைய பெயரை இரண்டாம் அலெக்சாண்டர் என்று பொறித்துக் கொண்ட அரசர்

(A) பாமன் ஷா
(B) முகமது கவான்
(C) கிருஷ்ணதேவராயர்
(D) சமுத்திர குப்தர்
(E) விடை தெரியவில்லை

161. Which among the following inscriptions mention the trade contacts between Mesopotamia and Harappan civilisation?

(A) Devanagiri
(B) Kharoshti
(C) Cuneiform
(D) Hieroglyphics
(E) Answer not known

கீழே கொடுக்கப்பட்டுள்ள எந்த கல்வெட்டுக் குறிப்புகள் மெசபடோமியாவுக்கும், ஹரப்பாவுக்கும் இடையேயான வணிகத் தொடர்புகளைக் குறிப்பிடுகின்றன?

(A) தேவநாகரி
(B) கரோஷ்டி
(C) க்யூனிபார்ம்
(D) ஹைரோக்ளைபிக்ஸ்
(E) விடை தெரியவில்லை

162. Which of the following statements are true about Directive Principles of state policy?

(i) Article 36 to 51 deals with directive principles of state policy.

(ii) Dr. B.R. Ambedkar described it as "novel features" of the Indian Constitution.

(iii) These principles are enforceable by the courts.

(A) (i) only
(B) (i) and (iii) only
(C) (i) and (ii) only
(D) (ii) and (iii) only
(E) Answer not known

கீழ்க்காணும் கூற்றுகளில் அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளை பற்றிய சரியான கூற்றை கண்டறிக :

(i) சட்டப்பிரிவு 36 – லிருந்து 51 வரை அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள் பற்றி கூறியுள்ளது.

(ii) டாக்டர் B.R. அம்பேத்கர் இதனை இந்திய அரசியலமைப்பின் புதுமையான சிறப்பம்சம் என விவரிக்கிறார்.

(iii) இந்த கொள்கைகளை நீதிமன்றத்தால் வலுக்கட்டாயமாக செயல்படுத்த முடியும்.

(A) (i) மட்டும்
(B) (i) மற்றும் (iii) மட்டும்
(C) (i) மற்றும் (ii) மட்டும்
(D) (ii) மற்றும் (iii) மட்டும்
(E) விடை தெரியவில்லை

163. Arrange the three tier Panchayat Raj system as per the constitutional provisions.

(A) Village Panchayat – Intermediate Panchayat – District Panchayat

(B) Panchayat Union – District Panchayat – Village Panchayat

(C) District Panchayat – Village Panchayat – Intermediate Panchayat

(D) Village Panchayat – Town Panchayat – District Panchayat

(E) Answer not known

அரசமைப்பு சட்டத்தின் படி மூன்று அடுக்குகளை கொண்ட பஞ்சாயத்து ராஜ் அமைப்பினை பொருத்துக.

(A) கிராமப் பஞ்சாயத்து – இடைநிலைப் பஞ்சாயத்து – மாவட்டப் பஞ்சாயத்து

(B) ஊராட்சி ஒன்றியம் – மாவட்டப் பஞ்சாயத்து – கிராமப் பஞ்சாயத்து

(C) மாவட்டப் பஞ்சாயத்து – கிராமப் பஞ்சாயத்து – இடைநிலைப் பஞ்சாயத்து

(D) கிராமப் பஞ்சாயத்து – நகரப் பஞ்சாயத்து – மாவட்டப் பஞ்சாயத்து

(E) விடை தெரியவில்லை

164. Assertion [A] : Article 249 of the constitution enables the Parliament to transfer a subject from the state list to the union list.

Reason [R] : It is for the purpose of legislation by parliament on grounds of national interest

(A) [A] is true, but [R] is false

(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]

(C) [A] is false, but [R] is true

(D) Both [A] and [R] are true; but [R] is not the correct explanation of [A]

(E) Answer not known

கூற்று [A] : அரசமைப்பின் 249-வது உறுப்பின்படி ஒரு அதிகாரத்தை மாநில பட்டியலிலிருந்து மத்திய பட்டியலுக்கு நாடாளுமன்றத்தால் மாற்ற முடியும்.

காரணம் [R] : தேசிய நலன் கருதி நாடாளுமன்றம் இம்மாற்றத்தை செய்யலாம்.

(A) [A] சரி, ஆனால் [R] தவறு

(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி; மேலும் [R] என்பது [A]விற்கு சரியான விளக்கமாகும்

(C) [A] தவறு, ஆனால் [R] சரி

(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி; ஆனால் [R] என்பது [A]விற்கு சரியான விளக்கமல்ல

(E) விடை தெரியவில்லை

165. Which day is celebrated as overseas Indian's day?

(A) November-9
(B) December-9
(C) January-9
(D) February-9
(E) Answer not known

'வெளிநாடு வாழ் இந்தியர்கள் தினம்' எந்த நாளில் கொண்டாடப்படுகிறது?

(A) நவம்பர்-9
(B) டிசம்பர்-9
(C) ஜனவரி-9
(D) பிப்ரவரி-9
(E) விடை தெரியவில்லை

166. Who is considered to be the Architect of the Constitution of India?

(A) Dr. B.R. Ambedkar
(B) Dr. Rajendra Prasad
(C) H.C. Mukherjee
(D) V.T. Krishnamachari
(E) Answer not known

யார் இந்திய அரசியலமைப்பின் சிற்பி எனக் கருதப்படுகிறார்?

(A) டாக்டர். பி.ஆர். அம்பேத்கர்
(B) டாக்டர். இராஜேந்திர பிரசாத்
(C) எச்.சி. முகர்ஜி
(D) வி.டி. கிருஷ்ணமாச்சாரி
(E) விடை தெரியவில்லை

167. The first modernised Jute Industrial Unit was established at ———— in West Bengal in 1855.

(A) Burnpur (B) Serampur

(C) Cloaster (D) Rishra

(E) Answer not known

1855-ல் மேற்கு வங்க மாநிலத்திலுள்ள ———— என்னும் ஊரில் நவீனமயமாக்கப்பட்ட சணல் தொழிற்சாலை முதல் முறையாக உருவாக்கப்பட்டது.

(A) பர்ன்பூர் (B) செராம்பூர்

(C) குளோஸ்டர் (D) ரிஷ்ரா

(E) விடை தெரியவில்லை

168. Arrange the chronological order. Following countries got highest point in the human development index in descending order (As on 2016)

1. Norway
2. Switzerland
3. India
4. Australia

(A) 1 4 2 3 (B) 4 2 1 3

(C) 2 1 4 3 (D) 2 1 3 4

(E) Answer not known

மனித மேம்பாட்டுக் குறியீட்டில் அதிக புள்ளிகள் பெற்ற நாடுகளை மேலிருந்து கீழாக வரிசைப்படுத்துக. (2016 ஆம் ஆண்டின் படி)

1. நார்வே
2. ஸ்விட்சர்லாந்து
3. இந்தியா
4. ஆஸ்திரேலியா

(A) 1 4 2 3 (B) 4 2 1 3

(C) 2 1 4 3 (D) 2 1 3 4

(E) விடை தெரியவில்லை

169. Which of the following is incorrectly paired?

| | | | |
|---|---|---|---|
| (i) | Taxes on Agricultural income | – | State |
| (ii) | Taxes on land and buildings | – | State |
| (iii) | Taxes on the consumption or sale of Electricity | – | Centre |
| (iv) | Land Revenue | – | Centre |

(A) (i) and (ii)
(B) (ii) and (iii)
(C) (iii) and (iv)
(D) (i) and (iv)
(E) Answer not known

தவறான இணையைக் கண்டுபிடி:

| | | | |
|---|---|---|---|
| (i) | வேளாண் வருமான வரி | – | மாநிலம் |
| (ii) | நிலம் மற்றும் கட்டிடங்கள் மீதான வரி | – | மாநிலம் |
| (iii) | மின்சார நுகர்வு அல்லது விற்பனைக்கான வரி | – | ஒன்றிய அரசு |
| (iv) | நில வருவாய் | – | ஒன்றிய அரசு |

(A) (i) மற்றும் (ii)
(B) (ii) மற்றும் (iii)
(C) (iii) மற்றும் (iv)
(D) (i) மற்றும் (iv)
(E) விடை தெரியவில்லை

170. The functional head of NITI Aayog

(A) Chairman
(B) Ex-officio members
(C) Vice-Chairman
(D) President of India
(E) Answer not known

நிதி ஆயோக்கின் நிர்வாக தலைவர் யார்?

(A) தலைவர்
(B) அதிகாரப்பூர்வ உறுப்பினர்கள்
(C) துணைத் தலைவர்
(D) இந்திய ஜனாதிபதி
(E) விடை தெரியவில்லை

171. A woman reformer who was instrumental in Dr. Muthulakshmi's introduction of the Devadasi Abolition Act

(A) Moovalur Ramamirtham Ammaiyar

(B) Annie Besant Ammaiyar

(C) Dr. Dharmambal Ammaiyar

(D) Nagammaiyar

(E) Answer not known

தேவதாசி முறை ஒழிப்பு சட்டம் கொண்டு வர டாக்டர். முத்துலட்சுமி அம்மையாருக்கு ஆணிவேராக இருந்த பெண் சீர்திருத்தவாதி

(A) மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்

(B) அன்னிபெசன்ட் அம்மையார்

(C) டாக்டர். தர்மாம்பாள் அம்மையார்

(D) நாகம்மையார்

(E) விடை தெரியவில்லை

172. The author of the book "Why I am an Atheist"?

(A) E.V.R. Periyar (B) C.N. Annadurai

(C) Bhagat Singh (D) Rajaguru

(E) Answer not known

"நான் ஏன் நாத்திகனாக இருக்கிறேன்"? என்ற புத்தகத்தின் ஆசிரியர்

(A) ஈ.வே.ரா. பெரியார் (B) சி.என். அண்ணாதுரை

(C) பகத்சிங் (D) ராஜகுரு

(E) விடை தெரியவில்லை

173. Name the author of book "Poverty and Un-British Rule in India".

(A) Bala Gangadhar Tilak

(B) Gopala Krishna Gokhale

(C) Dadabhai Naoroji

(D) M.G. Ranade

(E) Answer not known

"இந்தியாவில் வறுமையும் பிரிட்டிஷ் தன்மையற்ற ஆட்சியும்" என்ற நூலின் ஆசிரியர்

(A) பால கங்காதர திலகர்

(B) கோபால கிருஷ்ண கோகலே

(C) தாதாபாய் நௌரோஜி

(D) எம்.ஜி. ரானடே

(E) விடை தெரியவில்லை

174. Which of the following statements are true about Theeran Chinnamalai?

(i) Theeran Chinnamalai was a Palayakkarar of Kongu country who fought against the British East India Company.

(ii) He was trained by the French and Tipu.

(iii) From 1800 to July 31, 1805 (ie) the day of his hanging, Theeran Chinnamalai ceaselessly fought against the French.

(A) (i) only

(B) (i) and (iii) only

(C) (i) and (ii) only

(D) (ii) and (iii) only

(E) Answer not known

பின்வரும் கூற்றுகளில் தீரன் சின்னமலைப் பற்றிய சரியான கூற்று எது?

(i) தீரன் சின்னமலை ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனியை எதிர்த்துப் போரிட்ட கொங்கு நாட்டு பாளையக்காரர் ஆவார்.

(ii) இவர் பிரெஞ்சுக்காரர்களாலும், திப்புவாலும் பயிற்சி அளிக்கப்பட்ட பாளையக்காரர் ஆவார்.

(iii) 1800 லிருந்து அவர் தூக்கிலிடப்பட்ட 1805 ஜூலை 31 வரை பிரெஞ்சுக்காரர்களுக்கு எதிராகப் போராடினார்.

(A) (i) மட்டும்

(B) (i) மற்றும் (iii) மட்டும்

(C) (i) மற்றும் (ii) மட்டும்

(D) (ii) மற்றும் (iii) மட்டும்

(E) விடை தெரியவில்லை

175. Who published the Tamil newspaper Thozhilalan (worker)?

(A) M. Singaravelar

(B) M.C. Rajah

(C) Rettaimalai Srinivasan

(D) Moovalur Ramamirtham

(E) Answer not known

தொழிலாளன் (worker) என்ற தமிழ் பத்திரிக்கையை வெளியிட்டவர் யார்?

(A) ம. சிங்காரவேலர்

(B) எம்.சி. ராஜா

(C) இரட்டைமலை சீனிவாசன்

(D) மூவலூர் இராமாமிர்தம்

(E) விடை தெரியவில்லை

176. The LCM of two numbers is 6 times their HCF. If the HCF is 12 and one of the numbers is 36, then find the other number.

(A) 24

(B) 34

(C) 12

(D) 6

(E) Answer not known

இரு எண்களின் மீ.சி.ம ஆனது மீ.பெ.கா-வின் 6 மடங்காகும். மீ.பெ.கா 12 மற்றும் ஓர் எண் 36 எனில், மற்றோர் எண்ணைக் காண்க.

(A) 24

(B) 34

(C) 12

(D) 6

(E) விடை தெரியவில்லை

177. Pagoda was a ———————— coin of Vijayanagar descent.

(A) Silver (B) Copper

(C) Bronze (D) Gold

(E) Answer not known

விஜய நகரப் பேரரசில் அறிமுகமான ———————— நாணயம் பகோடா எனப்பட்டது.

(A) வெள்ளி (B) செம்பு

(C) வெண்கலம் (D) தங்கம்

(E) விடை தெரியவில்லை

178. Which of the following statements are true about V.O. Chidambaram Pillai?

(i) He was a follower of Gopalakrishna Gokhale.

(ii) He was known as Chekkiluththa Chemmal.

(iii) He founded the servants of India Society.

(iv) He was a lawyer.

(A) (iii) and (iv) only (B) (ii), (iii) and (iv) only

(C) (ii) and (iv) only (D) (i), (ii) and (iv) only

(E) Answer not known

கீழ்கண்ட கூற்றுகளில் வ.உ. சிதம்பரம் பிள்ளையை பற்றிய சரியான வாக்கியங்கள் எவை?

(i) கோபாலகிருஷ்ண கோகலேவின் சீடர் ஆவார்.

(ii) இவர் செக்கிழுத்த செம்மல் என்று அழைக்கப்பட்டார்.

(iii) இந்திய பணியாளர் சங்கத்தை தோற்றுவித்தார்.

(iv) வழக்கறிஞர் ஆவார்

(A) (iii) மற்றும் (iv) மட்டும் (B) (ii), (iii) மற்றும் (iv) மட்டும்

(C) (ii) மற்றும் (iv) மட்டும் (D) (i), (ii) மற்றும் (iv) மட்டும்

(E) விடை தெரியவில்லை

179. The term "Satyaputra" found in the Ashokan Inscription refers to

(A) Adiyaman
(B) Karikalan
(C) Pari
(D) Neduncheralathan
(E) Answer not known

அசோகர் கல்வெட்டில் குறிப்பிடப்படும் "சத்யபுத்ரர்"

(A) அதியமான்
(B) கரிகாலன்
(C) பாரி
(D) நெடுஞ்சேரலாதன்
(E) விடை தெரியவில்லை

180. What is the meaning of the word "Extinguish" when Valluvar tries to compare lust to "Pouring Ghee to Fire"?

(A) Put out
(B) System
(C) Life
(D) Expertise
(E) Answer not known

"நெய்யால் எரிநுதுப்பேம் என்றற்றால் கௌவையால்

காமம் நுதுப்பேம் எனல்"

என்னும் குறளில் நுதுப்பேம் என்பதன் பொருள் என்ன?

(A) அவித்தல்
(B) முறைமை
(C) ஆயுள்
(D) பயில்வுடைமை
(E) விடை தெரியவில்லை

181. Which of the traits differentiates all living things from human beings as according to Thiruvalluvar?

(A) Actions
(B) Foods
(C) Dress
(D) Place
(E) Answer not known

பிறப்பினால் எல்லா உயிர்களும் சமம் எனக் கருதும் வள்ளுவர் எதன் வழி அவற்றை வேறுபடுத்துகிறார்?

(A) தொழில்
(B) உணவு
(C) உடை
(D) இடம்
(E) விடை தெரியவில்லை

182. Aksai Chin remains a disputed area between China and ————.

(A) Bangladesh
(B) India
(C) Nepal
(D) Japan
(E) Answer not known

அக்சாய் சின் ———— மற்றும் சீனாவிற்கு இடையே சர்ச்சைக்குரிய பகுதியாக உள்ளது.

(A) வங்கதேசம்
(B) இந்தியா
(C) நேபாளம்
(D) ஜப்பான்
(E) விடை தெரியவில்லை

183. Assertion [A] : Cement production and consumption continue to grow despite the general recession in the economy.

Reason [R] : India is one of the largest cement producers and ranked first in the world.

(A) [A] is true but [R] is false
(B) Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true, but [R] is not the correct explanation of [A]
(E) Answer not known

கூற்று [A] : பொருளாதாரத்தில் பொதுவான மந்தநிலை இருந்த போதிலும் சிமெண்ட் உற்பத்தி மற்றும் நுகர்வு தொடர்ந்து வளர்ந்து வருகிறது.

காரணம் [R] : இந்தியா மிகப்பெரிய சிமெண்ட் உற்பத்தியாளர்களில் ஒன்றாகும் மற்றும் உலகில் முதல் இடத்தில் உள்ளது.

(A) [A] சரி ஆனால் [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி; மேலும் [R]-ஆனது [A]-க்கான சரியான விளக்கம் ஆகும்
(C) [A] தவறு, [R] சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, ஆனால் [R]-ஆனது [A]-க்கான சரியான விளக்கம் அல்ல
(E) விடை தெரியவில்லை

184. Tamil Nadu Government declares ———— as Education Development Day.

(A) 15th February
(B) 15th June
(C) 15th July
(D) 15th November
(E) Answer not known

தமிழக அரசு ———— ஆம் தேதியை கல்வி வளர்ச்சி நாளாக அறிவித்துள்ளது.

(A) 15 பிப்ரவரி
(B) 15 ஜூன்
(C) 15 ஜூலை
(D) 15 நவம்பர்
(E) விடை தெரியவில்லை

185. Tamil Nadu Gross State Domestic Product (GSDP) has grown at the rate of ———————% for the year 2022-2023 as against India's GDP growth rate of 7.24% during the same period.

(A) 8.10
(B) 8.12
(C) 8.15
(D) 8.19
(E) Answer not known

2022-2023 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) அதே கால கட்டத்தில் இந்தியாவின் GDP வளர்ச்சி விகிதமாக 7.24%க்கு எதிராக ———————% வளர்ச்சியடைந்தது.

(A) 8.10
(B) 8.12
(C) 8.15
(D) 8.19
(E) விடை தெரியவில்லை

186. Assertion [A] : "Mangala Malai" scheme was introduced during 2012-2013.

Reason [R] : To facilitate the orphan girls to get a suitable bridegroom.

(A) [A] is true, [R] is false
(B) Both [A] and [R] are true, [R] is the correct explanation of [A]
(C) [A] is false, [R] is true
(D) Both [A] and [R] are true, [R] is not the correct explanation of [A]
(E) Answer not known

கூற்று [A] : "மங்கள மாலை திட்டம்" 2012-2013இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

காரணம் [R] : அனாதை பெண்களுக்கு தகுந்த மணமகன் கிடைக்க வழிவகை செய்கிறது.

(A) [A] சரி, [R] தவறு
(B) [A] மற்றும் [R] இரண்டும் சரி, [R]-என்பது [A]-வின் சரியான விளக்கம்
(C) [A] தவறு, [R] சரி
(D) [A] மற்றும் [R] இரண்டும் சரி, [R]-என்பது [A]-வின் சரியான விளக்கம் இல்லை
(E) விடை தெரியவில்லை

187. Who said "Better Bullock carts and freedom than a train deluxe with subjection"?

(A) M. Veeraraghavachari

(B) B.P. Wadia

(C) G.S. Arundale

(D) Annie Besant

(E) Answer not known

அதிநவீன வசதிகளுடன் கூடிய ரயிலில் அடிமைகளாக் இருப்பதை விட சுதந்திரத்துடன் கூடிய மாட்டு வண்டியே சிறந்தது எனக் கூறியவர்

(A) M. வீரராகவாச்சாரி

(B) B.P. வாடியா

(C) G.S. அருண்டேல்

(D) அன்னிபெசன்ட்

(E) விடை தெரியவில்லை

188. The H.C.F. of two numbers is 11 and their L.C.M is 693. If one of the number is 77, find the other

(A) 79
(B) 88
(C) 99
(D) 77
(E) Answer not known

இரு எண்களின் மீ.பொ.வ 11 மற்றும் அவற்றின் மீ.சி.ம. 693. ஓர் எண் 77 எனில் மற்றொரு எண் என்ன?

(A) 79
(B) 88
(C) 99
(D) 77
(E) விடை தெரியவில்லை

189. A merchant has 120 ltrs and 180 ltrs of two kinds of oil. He wants to sell oil by filling the two kinds of oil in tins of equal volumes. What is the greatest capacity of such a tin?

(A) 10 ltrs
(B) 30 ltrs
(C) 60 ltrs
(D) 90 ltrs
(E) Answer not known

வியாபாரி ஒருவர் இரண்டு வகையான எண்ணெய்களை முறையே 120 லி, 180 லி என இரு கலங்களில் வைத்துள்ளார். சம அளவு கொண்ட கலனில் அந்த இரண்டு எண்ணெய்களை நிரப்பி விற்க விரும்பினார். கலன் கொள்ளும் அதிகபட்ச கொள்ளளவு என்ன?

(A) 10 லி
(B) 30 லி
(C) 60 லி
(D) 90 லி
(E) விடை தெரியவில்லை

190. If $1^3 + 2^3 + 3^3 + ... + K^3 = 72900$ then find $1 + 2 + 3 + ... + K$.

(A) 220 (B) 370

(C) 270 (D) 170

(E) Answer not known

$1^3 + 2^3 + 3^3 + ... + K^3 = 72900$ எனில், $1 + 2 + 3 + ... + K$ யின் மதிப்பு காண்க.

(A) 220 (B) 370

(C) 270 (D) 170

(E) விடை தெரியவில்லை

191. In the series 2, 3, 5, 9, $x$, 33, $y$, ..... what is the value of $x + y$?

(A) 65 (B) 72

(C) 75 (D) 82

(E) Answer not known

2, 3, 5, 9, $x$, 33, $y$, ..... என்ற தொடரில் $x + y$ ன் மதிப்பு என்ன?

(A) 65 (B) 72

(C) 75 (D) 82

(E) விடை தெரியவில்லை

192. When we write AZBYCX ..... YBZA how many consonants will appear to the left of the vowels?

(A) 7 (B) 8

(C) 9 (D) 10

(E) Answer not known

AZBYCX ..... YBZA என்றவாறு எழுதும் போது ஆங்கில உயிரெழுத்திற்கு இடது புறம் அருகில் வரக்கூடிய உயிரெழுத்து அல்லாத எழுத்துக்கள் எத்தனை?

(A) 7 (B) 8

(C) 9 (D) 10

(E) விடை தெரியவில்லை

193. If Rameela says, "Ragavi's father Raman is the only son of my father-in-law Ramanathan", then how is Ramani, who is the sister of Ragavi, related to Ramanathan?

(A) Wife
(B) Sister
(C) Daughter
(D) Grand Daughter
(E) Answer not known

ரமீலா கூறுகையில், "எனது மாமனாரான ராமனாதனின் ஒரே மகனான ராமன் ராகவியின் தந்தை", ரமணி, ராகவியின் சகோதரி என்றால் ரமணி ராமனாதனுக்கு என்ன உறவு?

(A) மனைவி
(B) சகோதரி
(C) மகள்
(D) பேத்தி
(E) விடை தெரியவில்லை

194. 3 men and 4 women can earn Rs. 3,780 in 7 days. 11 men and 13 women earn Rs. 15,040 in 8 days. In what time will 7 men and 9 women earn Rs. 12,400?

(A) 9 days
(B) 12 days
(C) 10 days
(D) 11 days
(E) Answer not known

3 ஆண்கள் மற்றும் 4 பெண்கள் 7 நாள்களில் ரூ.3,780 சம்பாதிக்கின்றனர். 11 ஆண்கள் மற்றும் 13 பெண்கள் சேர்ந்து 8 நாள்களில் ரூ.15,040 சம்பாதிக்கின்றனர் எனில் 7 ஆண்கள் மற்றும் 9 பெண்கள் சேர்ந்து எவ்வளவு நாள்களில் ரூ.12,400 சம்பாதிப்பர்?

(A) 9 நாள்கள்
(B) 12 நாள்கள்
(C) 10 நாள்கள்
(D) 11 நாள்கள்
(E) விடை தெரியவில்லை

195. For the principal Rs.10,000 the rate of interest is 15 p.a. for 3 years. Find the difference between C.I and S.I.

(A) 70.86
(B) 708
(C) 708.75
(D) 775
(E) Answer not known

அசல் தொகை ரூ. 10,000 ஆனது 15% ஆண்டு வட்டியில் 3 ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டு வட்டிக்கும், தனி வட்டிக்கும் இடையேயான வித்தியாசம் காண்க.

(A) 70.86
(B) 708
(C) 708.75
(D) 775
(E) விடை தெரியவில்லை

196. A person takes a loan of Rs.2,000 at 6% simple interest. He returns Rs.1,000 at the end of one year. In order to clear his dues at the end of 2 years how much he would pay?

(A) Rs. 1,240
(B) Rs. 1,180
(C) Rs. 1,120
(D) Rs. 1,200
(E) Answer not known

ஒருவர் ரூ. 2,000 ஐ 6% தனிவட்டிக்கு கடன் வாங்குகிறார். ஓர் ஆண்டு முடிவில் ரூ. 1,000 ஐ திருப்பி செலுத்துகிறார் எனில் அவர் அக்கடனை இரண்டாம் ஆண்டு முடிவில் முழுவதுமாக முடிக்க எவ்வளவு தொகை செலுத்த வேண்டும்?

(A) ரூ. 1,240
(B) ரூ. 1,180
(C) ரூ. 1,120
(D) ரூ. 1,200
(E) விடை தெரியவில்லை

197. Vignesh borrows Rs.10,000 for 2 years at 4% p.a. simple interest. He lends it to Sanjay at 6% p.a. for 2 years. Find his gain in this transaction per year.

(A) 200
(B) 400
(C) 600
(D) 800
(E) Answer not known

விக்னேஷ் 2 ஆண்டுகளுக்கு 4% வட்டிவீதத்தில் ரூ. 10,000 கடனாக பெற்றார். இந்தப் பணத்தை சஞ்சையிடம் 2 ஆண்டுகளுக்கு 6% வட்டிவீதத்தில் கடனாகக் கொடுத்தார். இந்தப் பரிமாற்றத்தில் அவருக்குக் கிடைத்த ஓர் ஆண்டின் லாபம் என்ன?

(A) 200
(B) 400
(C) 600
(D) 800
(E) விடை தெரியவில்லை

198. Find the ratio between HCF and LCM of the numbers 7 and 13.

(A) 1 : 91
(B) 13 : 7
(C) 91 : 10
(D) 7 : 13
(E) Answer not known

7 மற்றும் 13 ஆகிய எண்களின் மீ.பொ.வ மற்றும் மீ.சி.ம வின் விகிதத்தைக் காண்க.

(A) 1 : 91
(B) 13 : 7
(C) 91 : 10
(D) 7 : 13
(E) விடை தெரியவில்லை

199. Kayal bought 5 dozen eggs. Out of that 45 eggs are good eggs. Express the number of rotten eggs in percentage.

(A) 45%
(B) 35%
(C) 25%
(D) 15%
(E) Answer not known

கயல் 5 டசன் முட்டைகளை வாங்கினார். அதில் 45 முட்டைகள் நல்ல முட்டைகள், எனில் கெட்டுவிட்ட முட்டைகளின் சதவீதத்தைக் காண்க.

(A) 45%
(B) 35%
(C) 25%
(D) 15%
(E) விடை தெரியவில்லை

200. If Sunday = 2, Tuesday = 3, Thursday = 2. What is the value of Monday?

(A) 1
(B) 2
(C) 3
(D) 4
(E) Answer not known

Sunday = 2, Tuesday = 3, Thursday = 2 எனில் Monday வின் மதிப்பு என்ன?

(A) 1
(B) 2
(C) 3
(D) 4
(E) விடை தெரியவில்லை